

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று(21.6.2025) முகாம் அலுவலகத்தில், காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



மதுரை கிழக்கு தொகுதி, மதுரை மாநகராட்சி 5வது வார்டுக்குட்பட்ட நாராயணபுரம், வாசு நகர் முதல் தெருவில் புதிதாக அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை பணிகள் குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா,மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், மண்டல தலைவர் வாசுகி சசிக்குமார், கழக நிர்வாகிகள் பெ.சசிக்குமார், திருப்பாலை ராமமூர்த்தி, லட்சுமணன், கோபால கிருஷ்ணன் உள்ளிட்ட திரளானோர் உடன் பங்கேற்றனர்.



திண்டுக்கல் மண்டலம் தலைமை யகத்தில் பொது மேலாளர் அ .முத்துகிருஷ்ணன் தலைமையில் அணில் குமார் கண் மருத்துவமனை மற்றும் லக்ஷ்மனா மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இணைந்து நடத்தும் போ.வ.அலுவலர்கள், பணியாளர்கள் பங்கேற்ற இலவச கண் மருத்துவமுகாம் மற்றும் E C.G, சுகர், இரத்த அழுத்தம் தொடர்பான பொது மருத்துவ முகாம் நடைபெற்றது.



தேனி வடக்கு மாவட்டம் வடக்கு ஒன்றியம் பிசி பட்டியில்இளைஞர் அணி வடக்கு ஒன்றிய துணை அமைப்பாளர் அருள் வாசகன் ஏற்பாட்டில் அன்பகம் அலுவலகத்தை வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் சக்கரவர்த்தி. ஐயப்பன். அஜித்பாண்டி.நகர செயலாளர் புருஷோத்தமன். வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆசிப் கான். பேரூராட்சி தலைவர் கீதாசசி..நகர மன்ற துணை தலைவர் வழக்கறிஞர் செல்வம். முன்னாள் நகர செயலாளர் மயில்வாகனன். மகளிர் அணி பவானி மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.






முதலமைச்சர் –கழகத் தலைவர் அவர்கள் மீது ஆதாரம் அற்ற பொய் அவதூறுகளை பரப்பியும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜாவுக்கு கொலை மிரட்டல் விடுத்தும் பொதுக் கூட்டத்தில் பேசிய அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் உதயகுமார் மீது நடவடிக்கை எடுக்க கோரி மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளமகிழன் புகார் மனு அளித்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.6.2025) முகாம் அலுவலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் சந்தித்து, புகையிலை இல்லாத இளைஞர்கள் திட்டம் : இளைஞர்கள் திட்டம் 2.0ஐ சிறப்பாக செயல்படுத்தியதற்காக, தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சிறப்பாக செயல்படும் மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டு, தேசிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் தேசிய மதிப்பாய்வுக் கூட்டத்தின் போது ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் டி.எஸ். செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.6.2025) முகாம் அலுவலகத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர். ஆர்.மகேந்திரன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்சி அலுவலகம் கட்டிடத்தினை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் பார்வையிட்டார். உடன் மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன் கோவில்பட்டி நகர்மன்ற தலைவர் கருணாநிதி ஒட்டப்பிடாரம் முன்னாள் மாவட்ட பஞ்சாயத்து தலைவர் சந்திரசேகரன் நகர்மன்ற உறுப்பினர்கள் கு.தவமணி, சுரேஷ், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அபிராமி நந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடி வள்ளுவர் சிலை அருகே போடி நகர இளைஞர் அணி சார்பில் நகர இளைஞர் அணி அமைப்பாளர். சேக் அப்துல்லா சாகுல் தலைமையில் நகர செயலாளர் புருஷோத்தமன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆசீப்கான் முன்னிலையில் தி.மு.க. அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது. தேனி வடக்கு மாவட்ட செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன் மற்றும் கழக பேச்சாளர்கள் காமராஜ், முத்துச் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இக்கூட்டத்தில் மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜ ரமேஷ், நகராட்சி சேர்மன் ராஜராஜேஸ்வரி, மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மதுரை மாநகராட்சி 15வது வார்டு விசாலாட்சிபுரம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் ஆகியோர் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். உடன் மண்டலத் தலைவர் சரவண புவனேஸ்வரி, மாநகராட்சி சுகாதாரக் குழு தலைவர் ஜெயராஜ், பகுதி செயலாளர் சரவணன் அம்பலம், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.